# தளபதி மு.க.ஸ்டாலின் எழுபத்தி மூன்று!



1. அவையில் அடக்கம்.
2. சுவையில் மலைத்தேன்.
3. தொண்டில் பெரியார்.
4. பண்பாட்டில் அண்ணா.
5. செயலில் கலைஞர்.
6. அரசியலில் வீழ்ந்திடாத நாணல்.
7. திட்டம் எதிலும் தொலைநோக்கு.
8. பகை எதிர்ப்பில் இராஜேந்திர சோழன்.
9. படைஎடுப்பில் சேரன் செங்குட்டுவன்.
10. வீழ்ச்சியில் மழை நீர்.
11. எழுச்சியில் பீனிக்ஸ் பறவை.
12. மேடையில் நக்கீரன்.
13. மதிப்பதில் காந்தியம்.
14. பணிவினில் முதிர்கதிர்.
15. பழகுவதில் காந்தம்.
16. நடையினில் சாந்தம்.
17. இரங்குவதில் வறியவர் கண்ட வள்ளலார்.
18. கொடையில் குமணன்.
19. பிறப்பினில் சூரியனில் நெருப்பெடுத்து, நிலவில் நிறமெடுத்தது.
20. ஆளுமையில் அறமும், திறமும்.
21. வலிமையிலும் காண்பது மூவேந்தர் வாலிபம்.
22. வரலாற்றில் உத்திரமேரூர் கல்வெட்டு.
23. இலக்கியத்தில் கலிங்கத்துப் பரணி.
24. போராட்டத்தில் வெற்றி, கலைஞர் கல்லறை.
25. மூச்சில் நிறைந்தது மொழியும், இனமும்.
26. பதிவேட்டில் சாதனைப் பட்டியல்.
27. எதிர்ப்பதில் எரிமலைக் கொதிப்பு.
28. எவரும் எதிர்பாராதது தொடர் நிகழ்ச்சியில் பங்கேற்பது.
29. எழுத்தாளர்க்கு ஏற்றிவிடும் ஏணி.
30. கடமையில் தூங்காமை.
31. காலத்தில் கிடைத்த மானுட நன்கொடை.
32. இயக்கத்தில் தலைமைப் பண்பு.
33. கூட்டணியில் உறுதிப்பாடு.
34. வாக்குறுதியில் ”சொல்வதைச்செய்வோம்; செய்வதைச் சொல்வோம்.
35. அன்பு பாராட்டுவதில் எதிரிகளுக்கும் கைகுலுக்கல்.
36. கலையில் வசீகரிப்பு.
37. ஆட்சிக் கட்டிலில் அனைவர்க்கும் அமுத சுரபி.
38. அணுகுவோர்க்குக் குழந்தையின் எளிமை.
39. சட்ட திட்டங்களில் முத்திரைப் பதிக்கும் புதுமை.
40. சிறார்க்கும் பசியாற்றும் ஊட்டச்சத்து.
41. வழி நடத்துவதில் அறிவாலயச் சூரியன்.
42. பயணத்தில் அரிமா நடை.
43. சொல்லில் இன்மொழி.
44. ஆற்றலில் மாற்றாரையும் மயக்குதல்.
45. மறக்க முடியாதது, இளமையிலேயே இயக்கப் பணி.
46. சொல்லாடலில் வேட்ப மொழிதல் நேர்த்தி.
47. ஆட்சியியலில் அஜந்தா ஓவியம்; கலைஞர் காவியம் .
48. புரிதலில் எல்லோருக்கும் புதுக்கவிதை.
49. எதிரிகளுக்குப் புதிரான விடுகதை.
50. காலையில் உடற்பயிற்சி.
51. உழைப்பதில் விடாமுயற்சி.
52. ஏற்றது சிறைத் தழும்பு.
53. ஏற்காதது சோம்பல்.
54. கொண்டது சுறுசுறுப்பு.
55. எழுதியது தன்னுடல் தானம்.
56. இயக்கத்தில் 60 ஆண்டு கடந்த கடைநிலைத் தொண்டன் .
57. பெறுதல் என்பது கழகத் தோழர்களின் அன்பையும், நூல்களையும்.
58. விரும்புவதும் தருவதும்; கற்பித்தலுக்கான உலக நூல் நிலையங்கள் பசிதீர்த்தல்.
59. தூற்றும் பகைவர்க்கும் வெறுப்பிலா அரவணைப்பு.
60. தொண்டர் யாவரும் கிடைத்த உடன்பிறப்பு.
61. எப்பொருளிலும் அணையா விளக்கு.
62. கதியற்றோர்க்குக் கலங்கரை விளக்கம்.
63. தேர்தலில் வெல்திறன் கையாளுகை.
64. அஞ்சுவது, கடமை ஆற்றுவதில் பிழை நேராமை.
65. அஞ்சாதது ‘மிசா’ சட்டம்.
66. அலட்சியப்படுத்துவது, ஒன்றிய அரசின் மிரட்டல்கள்.
67. போற்றுவது அரசியல் அமைப்புச் சட்டம்.
68. நட்பினில் சோழன், பிசிராந்தையார்.
69. நாடுபவர்க்கு நன்றியின் முன்னுரை.
70. கயவர்களுக்குக் கல்லறை முடிவுரை.
71. நெஞ்சில் பதித்தது அண்ணாவின் மூன்று மந்திரங்கள்.
72. இயக்கக் கொள்கை ஐம்பெரும் முழக்கம்.
73. திராவிட மாடல் ஆட்சியைத் தொடர வைப்பதும்; மக்கள் பணிக்கான கடமையாற்றுவதும்!

**கவிஞர் தமிழ்தாசன்**
*கழக தீர்மானக்குழுத் தலைவர்*



# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (4.3.2026 - புதன்கிழமை) மாலை 6. 00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் ஜி.செல்வராஜ் தலைமையில் கலைஞர் அரங்கம் தூத்துக்குடியில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி துணை செயலாளர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1. மார்ச் - 9 அன்று திருச்சி கழக மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து
2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் லட்சியப் பயணம் வெல்லட்டும்!

# பாதை மாறாத நம் கால்களும் தாழாத தலைகளுமே ‘திராவிட மாடல்’ 2.0 ஆட்சியை உறுதி செய்யும்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 4–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் லட்சியப் பயணம் வெல்லட்டும் எனவும் பாதை மாறாத நம் கால்களும் தாழாத தலைகளுமே ‘திராவிட மாடல்’ 2.0 ஆட்சியை உறுதி செய்யும் எனவும் ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தனது 73வது பிறந்த நாளை நேற்று அனைவரும் பாராட்டும் வகையில் கொண்டாடினார். வழக்கம்போல் அண்ணா, கலைஞர், பெரியார் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்திய அவர், தொடர்ந்து தொண்டர்களின் வாழ்த்து மழையில் நனைந்தார். தனக்கு வாழ்த்து தெரிவிக்க கட்டுக்கடங்காத கூட்டம் வந்திருந்தாலும், மாற்று திறனாளிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து அவர்களிடம் நேரில் சென்று வாழ்த்து பெற்றார். அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் அவரை பாராட்டி சென்றனர். கூட்டணி கட்சி தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவிக்க குவிந்தனர். இந்தியாவே போற்றும் திராவிட மாடல் நல்லாட்சி நாயகன், தனது பிறந்த நாளில் கூட ‘உழைப்பை தவிர வேறொன்றும் அறியேன்’ என தனது லட்சிய பயணத்தையே மக்கள் மத்தியில் முன்னிறுத்தி யுள்ளார்.

முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் தமிழகத்தை கொரோனா என்னும் கொடிய நோய் தாக்கி கொண்டிருந்தது. அதிலிருந்து மக்களை மீட்பதே தனது முதல் பணி என கூறிய முதல்வர், அதற்காக அமைச்சர்களையும், அரசு இயந்திரங்களையும் முடுக்கி விட்டார். விளைவு 2 மாத காலத்திற்குள் கொரோனா கட்டுக்குள் வந்தது. அதன் தொடர்ச்சியாக அவர் கொண்டு வந்த மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம், நான் முதல்வன், புதுமைப்பெண், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம், பசுமை தமிழ்நாடு இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்திய அளவில் பாராட்டை பெற்றன.

இவை எல்லாவற்றையும் தாண்டி கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டமும், அரசு பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணமும் வரலாற்று சாதனைகளை படைத்தன. இத்திட்டங்களை நமது அண்டை மாநிலங்கள் கூட எப்படி இதை செயல்படுத்துகின்றனர் என தமிழகத்தை பார்த்து வியக்கின்றனர். ‘தமிழும், தமிழ்நாடும் நம் உயிர், அவற்றை காப்பதே நம் கடமை’ என தனது பிறந்த நாளில் சூளுரைத்த தமிழ்நாடு முதலமைச்சர், அதற்கேற்ப தமிழினத்தை சூழ்ந்த சூழ்ச்சிகளை ஒவ்வொரு காலத்திலும் முறியடித்துக் காட்டியுள்ளார். தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமல் தொடர்ந்து வஞ்சனை, மும்மொழி திட்டம், புதிய கல்விக் கொள்கை என ஒன்றிய அரசு தொடர்ந்து பல இன்னல்களை அளித்த போதிலும், தமிழகம் தலை குனியாது என தன்னம்பிக்கையோடு கூறி, இம்மாநிலத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிய பெருமை தமிழக முதல்வரையே சாரும்.

ஆளுநர் என்ற பெயரில் ஒன்றிய அரசின் ஒற்றனும், சிபிஐ, அமலாக்க பிரிவு உள்ளிட்ட ஏவல் படைகளும் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சிக்கு ஊறு விளைவிக்க முயன்ற போதெல்லாம் தன் போர் திறத்தால் அவற்றை வென்று காட்டியவர் தமிழக முதல்வர். திராவிட மாடல் அரசின் திட்டங்களும், சாதனைகளும் இன்று தனிக்குணம் கொண்ட தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்க வழிகோலியுள்ளது. சூழ்ந்து வந்த சூழ்ச்சிகளை தமிழகம் இன்று முதல்வர் தலைமையில் முறியடித்து, நாட்டிற்கே புத்தொளி பாய்ச்சும் மாநிலமாக தமிழகம் உயர்ந்து வருகிறது.

நம் தமிழினத்தின் லட்சிய பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக்கூடாது என்கிற முதலமைச்சரின் பிறந்த நாள் உறுதிமொழியை தமிழக மக்கள் சிரமேற்கொள்ள வேண்டும். பாதை மாறாத நம் கால்களும், தாழாத நம் தலைகளுமே திராவிட மாடல் 2.0 ஆட்சியை உறுதி செய்யும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


தினகரன்
மார்ச் 2, 2026 திங்கட்கிழமை
லட்சிய பயணம் வெல்லட்டும்
தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், தனது 73வது பிறந்த நாளை நேற்று அனைவரும் பாராட்டும் வகையில் கொண்டாடினார். வழக்கம்போல் அண்ணா, கலைஞர், பெரியார் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்திய அவர், தொடர்ந்து தொண்டர்களின் வாழ்த்து மழையில் நனைந்தார். தனக்கு வாழ்த்து தெரிவிக்க கட்டுக்கடங்காத கூட்டம் வந்திருந்தாலும், மாற்று திறனாளிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து அவர்களிடம் நேரில் சென்று வாழ்த்து பெற்றார். அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர்கள் முதல்

# வரலாற்று முதல்வர் வாழ்க!

பெரியாரின் கொள்கைக் குன்றம்
பேராசை இல்லா நேயம்
அறிஞரின் அண்ணா வடிவாம்
ஆற்றலில் கலைஞர் தடத்தை
நெறியாகத் தொடரும் தோழன்
நிகரிலாத் தொண்டுக் கோமான்
நெறியான ஆட்சி காணும்
நிகரிலா உழைக்கும் தூயோன்!

இளமையில் கழகம் ஊன்றி
இன்தமிழ் மொழியைக் காத்துப்
பலமெனத் தொண்டு செய்து
பகலவன் ஒளியாய் எங்கும்
தலமுள தமிழர் உள்ளம்
தாங்கிடும் கலைஞர் போற்றி
வளமிகு எஃகுக் கோட்டை
வரலாறே முதல்வர் வாழ்க !

சிற்றூர் பேரூர் எல்லாம்
சீர்மிகு கழகம் காத்தே
உற்றநம் உடன் பிறப்பை
உயிரெனப் போற்றி வாழும்
நற்றமிழ் நாடும் சான்றோர்
நாளெலாம் போற்றும் எங்கள்
கொற்றவ முதல்வர் இசுடாலின்
கொள்கையின் மூச்சே வாழி !

வேர்ப்பகை அகற்றி நம்மோர்
வேதனை மாற்றும் அன்பே !



காருள அமுத ஊற்றாய்க்
கவருதே உன்றன் சேவை
தேருள அச்சாணி போன்றே
திமுக கண்ட பொருளே
நீருள குளத்தின் மேன்மை
நினதே ! வெற்றி நமதே !



தமிழ்மாமணி **வா.மு.சே.திருவள்ளுவர்,**
தலைவர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

## தூத்துக்குடி மாவட்டம் – பாண்டவர்மங்கலத்திலுள்ள தனியார் தீப்பெட்டி குடோனில் ஏற்பட்ட

# தீ விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 4–

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாண்டவர்மங்கலம் கிராமத்திலுள்ள தனியார் தீப்பெட்டி குடோனில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அறிவிப்பு வருமாறு:–

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாண்டவர்மங்கலம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான தீப்பெட்டி குடோனில் 02.03.2026 அன்று காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த தீ விபத்தில் கோவில்பட்டி வட்டம், கொடுக்கம்பாறை கிராமம், விஜயாபுரி பகுதியைச் சேர்ந்த திரு.கார்த்திக் (வயது 27) த/பெ.சமுத்திரம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் பலத்த காயமடைந்து தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, பேரநாயக்கன்பட்டியைச் சேர்ந்த திரு. சுடலைமுத்து (வயது 42) மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோவில்பட்டி வட்டம், கிழவிபட்டி கிராமம், துரைசாமிபுரம் பகுதியில் வசித்துவரும் திரு.கணேசன் (வயது 47) ஆகிய இருவருக்கும் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# நிரூபித்துக்கொண்டே இருக்கிறாய் தலைவா!

மார்ச் 1.
தலைவருக்கு தாலாட்டு

இன எதிரிகள்
சொன்னார்கள்!

கலைஞரை
விட
நீ
ஆபத்தானவர் என்று!

அதற்கே
நீங்கள்
இரு நூறாண்டு
இருக்க வேண்டும்
எமக்காய்!

ஆதிக்கத்தை
எதிர்த்த
தொடர் போராட்டங்கள் தான்
உன்னை
இத்தனை அழகாக்குகிறது
முதல்வரே!

களம்தான்
சரியான தலைவனை
அடையாளம் காட்டுகிறது.


அதை
நிரூபித்துக்
கொண்டேயிருக்கிறாய்
தினமும்.

அளவுகோல்
கொண்டெல்லாம்
உன் மார்பை அளவெடுக்க
முடியாது.

தமிழ்நாட்டின் அகலம்தான்
அதன் அளவு

வாழ்த்துகள்
முதல்வரே!

இப்படி
அடித்து ஆடுவாயென



எவனும் கணிக்கவில்லை.

நீங்கள்
படித்த பாடசாலை
அப்படி.

பிறந்தநாளை கொண்டாட
வேண்டாம்
கொள்கை பேசு
என்பாய்!

உம்மை
கொண்டாடுவது
கொள்கையை
ஏந்துவதுதான்!

நினது நாட்களின்
சுவடுகள்
ஆரியத்தை வீழ்த்திய
சூரிய பொழுதுகளை
சாத்தியமாக்கும்.

பெரியார்
பேரறிஞர்
கலைஞர் மட்டுமல்ல
உமக்குள்
இன்னும் மூவர்
இருக்கிறார்கள்.

நடேசனார்
நாயர்
தியாகராயர்.

அறுவர் கலவை நீ!

உன்னை
அசைக்க ஒருவனாலும்
முடியாது.

ஸ்டாலின்
என்பது பெயரல்ல..
அன்றும்....
இன்றும்...
பாசிசத்தை
எதிர்த்து
வென்ற வரலாறு.

வரைபடத்தில்
டெல்லி
குனிந்து பார்க்கும்
நம் மண்ணை

நிமிர்ந்து
பார்க்கிறது உன்னை.

பெரியாரின்
வடம் பிடித்தாய்.
அண்ணாவிடம்
அடம் பிடித்தாய்.
கலைஞரின்
தடம் பிடித்தாய்.
வரலாற்றில்
இடம் பிடித்தாய்.

தாயுமானவராகி
தாங்குகிறாய்
தாய் தமிழகத்தை.

வாழ்த்துகள் முதல்வரே!

நின்
ஒளி கூடுக!



**வி.உ. இளவேனில்**

## கழக பொதுக்குழு உறுப்பினர்

# நாகை அம்மன் கே.பாண்டியன் மறைவு!

### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

*நாகை, மார்ச் 4 -*


*நாகை மாவட்டம் நாகை நகரம் கழக பொதுக்குழு உறுப்பினர் நாகை அம்மன் கே.பாண்டியன் ( வயது 70) 1.3.2026 அன்று இரவு 10.00 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*தகவல் அறிந்ததும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்மன் கே. பாண்டியன் அவர்களை இழந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கும் நாகை மாவட்டக் கழக தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.*

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா என். இராமசாமி
### மார்ச் 4 (2022)



**தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.**

**1976 நெருக்கடி காலத்தில் ‘ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக’ என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**